## ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை – 2015

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை அதிகாரச்சட்டத்தின் iv ஆம் பகுதியின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது ரூபா 3,491,000 தொகையான கிடைக்க வேண்டிய வியாபார வருமானங்களுக்குரிய ரூபா 463,092 தொகையான பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2005 இன் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை அதிகாரச்சட்டம் | |
| (i) 4(ஈ) பிரிவு | சபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக தேவையான பணம் முன்னரே தீர்மானிக்கப்பட்டு சேமிக்கப்பட்ட பணம் முதலீடு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 5(1) ஆம் பிரிவு | அமைச்சரால் 13 அங்கத்தவர்களை உள்ளடக்கிய நிர்வாக சபையொன்று நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 08 அங்கத்தவர்கள் மாத்திரம் நிர்வாக சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். |

(iii) 5(2) ஆம் பிரிவு — யாராவது அங்கத்தவர் ஒருவர் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலம் நிர்வாக சபைக் கூட்டங்களுக்கு சமூகமளிக்காதுவிடின் அமைச்சரால் பதிற்கடமைக்காக வேறொருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட 6 கூட்டத் தடவைகளில் ஒரு கூட்டத்திற்கு மாத்திரம் சமூகமளித்த அங்கத்தவர் ஒருவருக்காக வேறொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

(i) 4.2.2 ஆம் பிரிவு — செயல்நடவடிக்கைத் திட்டம், பாதீட்டுடன் உள்ளபடியான செயலாற்றலை ஒப்பிடக்கூடிய முறையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 9.14.2 ஆம் பிரிவு — மனித வள முகாமைத்துவம் தொடர்பாக அலுவலகக் கைநூல் ஒன்று முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் 2013 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாதிருந்தமையால் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான அலுவலக கைநூல் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 சனவரி 15 ஆம் திகதிய 01/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை — பொது முயற்சிகளில் முகாமைத்துவ தரங்களுக்குரிய உத்தியோகத்தர்கள் ஒய்வுபெறும் போது ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமான பதிலாள் ஒருவரை நியமிப்பதற்கு திட்டமிடுவது நிர்வாக சபையின் பொறுப்பொன்றாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சபையின் பணிப்பாளரின் ஓய்வுபெறும் வயது 2015 யூன் 03 ஆந் திகதியளவில் பூர்த்தியடைந்திருந்த போதிலும் பதிலாள் ஒருவரை நியமிப்பதற்கான திட்டம் தயாரிக்கப்படாமையின் காரணமாக அறிக்கைத் திகதி வரையிலும் அப்பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி விளைவு ரூபா 4,293,560 மிகையொன்றாக

இருந்ததுடன், இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,901,337 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 607,777 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் மொத்த வருமானம் ரூபா 19,715,719 இனால் அதிகரித்திருந்த போதிலும், உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைச் செலவினம் ரூபா 20,907,970 இனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை சபையின் மிகை கிரமமாக வீழ்ச்சியடைந்திருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது அது கருத்தில் கொள்ளத்தக்களவு அதிகரிப்புடன் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மிகையில் குறைவொன்றைக் காண்பித்தது. ஊழியர் ஊதியம், அரசாங்க வரிகள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை சீராக்கியதன் பின்னர் 2011 ஆம் ஆண்டில் ரூபா 6,178,733 தொகையான பங்களிப்பு 2013 ஆம் ஆண்டு வரையில் ரூபா 4,929,845 வரை கிரமமாகக் குறைவடைந்திருந்த போதிலும், மீண்டும் 2014 ஆம் ஆண்டின் போது 126 சதவீத அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது அது ரூபா 10,012,380 ஆனமையால் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 10.44 சதவீத குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2005 இன் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தாராதர அங்கீகார சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சபையின் பணிகள் பின்வருமாறு இருந்தன.

- உரிய சர்வதேச நியமத்தின் அடிப்படையில் தேசிய நியமங்களுக்கு இணங்க பரிசோதனைக் கூடங்களுக்கும், உறுதிப்படுத்துகின்ற மற்றும் பரிசோதனை நிறுவனங்களுக்கும், பயிற்சியளித்தல் நிறுவனங்களுக்கும் மற்றும் ஒத்தியல்பு மதிப்பீட்டைச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட ஏனைய தரப்பினர்களுக்கும் தராதரங்களை வழங்குதல்

- தீர்மானிக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு இணங்க தராதர நடவடிக்கைகளை முன்னேற்றுதல், தராதரத்தின் போது சர்வதேச ஒத்துழைப்பிற்காக வசதிகளை வழங்குதல்

- தராதரத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தலும் மேம்படுத்துதலும், மதிப்பீட்டாளர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல் மற்றும் அது தொடர்பான தகவல்களை விளம்பரம் செய்தல்

- வெளிநாட்டு மற்றும் சர்வதேச சபைகளுடன் தராதரத்திற்குரிய விடயங்கள் தொடர்பாக பரஸ்பர ஏற்றுக்கொள்ளல் அடிப்படையில் உடன்படிக்கையொன்றை ஏற்படுத்துதல்

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கையினைப் பரீட்சித்த போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) புதிய தராதரங்களை வழங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2005 ஆம் ஆண்டு முதல் தராதரத்திற்கு உட்படுத்த வேண்டிய பரிசோதனைக்கூடங்களிலும் வைத்திய ஆய்வுகூடங்களிலும் முறையே 184 மற்றும் 311 கூடங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், 2005 முதல் 2015 வரை 62 பரிசோதனைக்கூடங்களும், 20 வைத்திய ஆய்வுகூடங்களும் மாத்திரம் தராதரத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. தராதரத்திற்கு உட்படுத்தப்பட்ட 06 பரிசோதனைக்கூடங்களிலும் 05 வைத்திய ஆய்வுகூடங்களிலும் வருடாந்த தராதரத்தைப் பெற்றுக்கொள்வதிலிருந்து விலகியிருந்தனர்.

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை பரிசோதனை செய்யும் 01 நிறுவனத்திற்கு மாத்திரமே தராதரமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனமும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தாரதர செயற்பாடுகளிலிருந்து விலகியிருந்தது.

(iii) 2009 ஆம் ஆண்டின் போது சான்றிதழ் விநியோகிக்கும் நிறுவனங்களில் தராதரம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டு வரையில் சான்றிதழ் விநியோகிக்கும் 06 நிறுவனங்கள் மாத்திரம் தராதரப்படுத்தலை மேற்கொண்டிருந்தது. அதில் ஒரு நிறுவனம் மீளாய்வாண்டில் தராதரப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து விலகியிருந்தது. மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் சான்றிதழ் விநியோகிக்கும் நிறுவனத்தின் கீழ் ''முறைமைகள் மற்றும் பச்சையில்ல வாயு வழங்குகின்ற'' 04 நிறுவனங்களுக்காக தராதரச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தராதரச் சான்றிதழ் விநியோகம் தொடர்பாக பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவ்வாறான தாரதரச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(iv) ஒவ்வொரு வருடமும் விஷேட அறிவினை முன்னேற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் (Proficiency Testing Programme) கீழ் புதிய நிறுவனமொன்றை இனங்கண்டு அந்நிறுவனத்தை ஏற்றுக்கொள்வதற்கு உடன்படல் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் பின்னர் புதிய நிறுவனங்களை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கைகளின் பிரகாரம் பரிசோதனைக் கூடம் மற்றும் அளவை நிறுவனங்களின் தராதரப்படுத்தல் தவிர ஏனைய துறைகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளக்கூடிய அளவு செயல்முன்னேற்றமொன்று ஏற்பட்டிராதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கு காரணங்களாக தராதரப்படுத்தும் செயற்பாடுகள் முழுமையாக சுயாதீனமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் தராதரப்படுத்தலை கட்டாயப்படுத்தல் தொடர்பாக சபைக்கு சட்டரீதியான இயலுமை காணப்படாதிருந்தமையும் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தன.

**(ஆ) பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் (Create Public Awareness)**

பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக செயல்நடவடிக்கைத் திட்டத்தையும் செயலாற்றல் அறிக்கைகளையும் ஒப்பீடு செய்த போது பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது பயிற்சி மற்றும் தெளிவுபடுத்தும் 21 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 16 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே

நடாத்தப்பட்டிருந்தன. அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 50 சதவீத குறைவினை சுட்டிக்காட்டுகின்றது.

(ii) தராதரப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் 05 பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் 02 சேவைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியதாக செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சேவைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமோ அல்லது பத்திரிகை அறிவித்தலோ பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தராதர சேவைகளை வழங்குதல் - Providing Accreditation Service**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) தராதர செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள் கூட்டப்பட வேண்டியிருந்த போதிலும் 11 தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்களில் 04 குழுக்களுக்குரிய கூட்டம் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) விஷேட இயலுமைகளை வழங்குவதற்காக 2 வெளி நிறுவனங்கள் சபையில் பதிவு செய்திருந்த போதிலும், அதில் ஒரு நிறுவனம் மாத்திரம் 03 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருந்தது.

(iii) தராதர சான்றிதழ்களைப் பெற்று தராதர சேவைகளை வழங்கும் நிறுவனத்தால் 3 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் தராதரப்படுத்தல் புதுப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 33 நிறுவனங்களுக்காக மீண்டும் தராதரப்படுத்தலை புதுப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 12 நிறுவனங்கள் தராதரத்தைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) இயலுமை மேம்படுத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது மதிப்பீட்டாளர்களை பயிற்றுவிக்கும் 04 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டில் நடாத்தப்பட்ட 03 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 01 நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டமையின் காரணமாக மதிப்பீட்டாளர்களை பயிற்றுவித்தல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 182,771 செலவினமொன்று சபையால் செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்காகக் கிடைத்த வருமானம் ரூபா 80,000 மாத்திரமாகும். எவ்வாறாயினும், முன்னைய ஆண்டின் போது 3 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 1,162,528 செலவிடப்பட்டு பெறப்பட்ட வருமானம் ரூபா 2,702,334 ஆக இருந்தது. அதன் பிரகாரம் இவ்வருடத்தின் வருமானம் 97 சதவீதத்தால் குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

சபையின் உத்தியோகத்தர்கள் கற்கை/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வெளிநாடு செல்லும் போது அந்த வெளிநாட்டு பயிற்சி நிறுவனத்தால் தேவையான வசதிகள் வழங்கப்பட்டிருந்தும் சபையினாலும் உத்தியோகத்தருக்கு வசதிகளை வழங்குவதற்காக ரூபா 52,085 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தராதர அங்கீகாரத்திற்காக விண்ணப்பிப்பதை செயற்திறனானதாக்குவதற்காக சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த இணைய கணணி முறைமையின் சேவைக் கட்டணமாக 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 2,014,183 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இந்த மென்பொருளின் குறைபாடுகளை சரி செய்வதற்காக பணிப்பொறுப்பு கையளித்தல் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 09 மாதங்களுக்காக ரூபா 270,000 படியொன்றும் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஒன்று மாத்திரம் ஆனமையால் உரிய சகல செலவினங்களும் சிக்கனமற்ற செலவினத்திற்குள்ளாகியிருந்தது.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் மேலதிக பணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்க்கப்படுவதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை பத்திரிகை அறிவித்தலை பிரசுரிப்பதற்காக ரூபா 196,661 செலவிடப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுத் திகதியான 2016 ஆகஸ்ட் வரையிலும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தகவல் தொழில்நுட்ப) பதவிக்காக மீளாய்வாண்டின் போது அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் அந்த பதவிக்கான ஆட்சேர்ப்பு கணக்காய்வுத் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133(1) (அ) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலமேனும் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.2 கொள்வனவு செயல்முறைகள்**

மீளாய்வாண்டின் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 13,905 தொகையான 02 எழுதும் மேசைகள், ரூபா 98,946 பெறுமதியான 01 மடி கணனி, ரூபா 112,500 பெறுமதியான 05 அச்சிடல் இயந்திரங்கள் மற்றும் ரூபா 17,450 பெறுமதியான 05 டொங்கிள்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் கொள்வனவுத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | கொள்வனவு நடைமுறைகள் | சபைக்கு ஆண்டின் போது தேவையான கொள்வனவுகளின் சரியான தன்மையை தீர்மானிக்க முடியாமையினால் கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக மேற்கெள்ளப்பட்டமை. |
| (ஆ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | சபை தயாரித்திருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றலை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை. |